BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, உள்ளூர் உணவகங்கள் மற்றும் மதுபானக் கடைகள் மீண்டும் திறக்க அனுமதிக்கப்படும்போது, அவற்றின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் விதமாக திறந்த வெளிகளில் இருக்கும் இடத்திலும் விரிவுபடுத்திக்கொள்ள அனுமதி அளிக்கும்.

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 15, 2020) – கடந்த வாரத்தில், பிரதேச அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டபோது, உள்ளூர் உணவகங்களும் மதுபானக் கடைகளும் ஒருவழியாக மீண்டும் திறப்பதற்கு தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கையில் அவர்களுக்கு ஆதரவளிக்க ப்ராம்ப்ட்டன் நகர சபை ஒப்புதல் அளித்தது.

பிராந்தியக் கவுன்சிலராகிய *பேட் ஃபோர்ட்டினி* அவர்கள், உள்ளூர் உணவகம் மற்றும் பார்களாகிய ஜாக் ஆஸ்ட்டர்'ஸ் பார் அண்ட் க்ரில் மற்றும் ஆஸ்கார்'ஸ் ரோட் ஹவுஸ் பார் அண்ட் க்ரில் ஆகிய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின்னர், வர்த்தகம் சுறுசுறுப்பாக மீட்சி அடையத் தேவையான திறந்தவெளி காலியிடங்களிலும் அவற்றை விரிவுபடுத்திக்கொள்ள, உணவகங்களுக்கு அனுமதியளிக்கலாம் என வேண்டுகின்ற ஒரு தீர்மானத்தை முன் வைத்தார். இந்த தீர்மானத்தை நகர சபை ஏகமனதாக நிறைவேற்றியது.

ப்ராம்ப்ட்டனில் உள்ள உணவகங்கள் மற்றும் மதுபான பார்கள் திறந்த வெளியில் உட்கார இடமளிக்கும் வகையில், பக்கவாட்டு நடைபாதைகள், முற்றங்கள் மற்றும் தனியார் பார்க்கிங் பகுதிகளிலும் விரிவாக்கம் செய்ய அனுமதிக்கப்படும்; பிரதேச ஆட்சி அமைப்பினால் திறந்தவெளியில் உணவருந்தும் சேவைகளை மீண்டும் திறக்க மாகாணத்திலிருந்து அனுமதி கிடைத்தவுடன் இப்படி அனுமதிக்கப்படும். இந்த சமயத்தில், ஒன்ட்டேரியோ அரசாங்கமானது, பீல் பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், மதுபானக் கடைகள் மற்றும் பிற வணிக நிறுவனங்களை மீண்டும் திறக்க அனுமதிக்கவில்லை.

உள்ளூர் உணவகங்கள் மற்றும் சிறு வணிகங்கள் மீட்சிபெறுவதில் உதவுவதற்காக திறந்தவெளி முற்றம் மற்றும் பக்கவாட்டு நடைபாதை அனுமதி கட்டணமும் கூட 2020 ஆண்டுக்கு தள்ளுபடி செய்யப்படும்.

நகரத்தை பாதுகாப்பாகவும் படிப்படியாகவும் மீண்டும் திறப்பதற்கான திட்டமிடல் தொடர்கையில், பொது சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் உடல் ரீதியான சமூக விலகல் விதிகளை கடைப்பிடிக்கையிலேயே, குறைவான ஆபத்து கொண்ட இயக்க நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான வழிகளை அடையாளம் காண, கவுன்சிலும் ஊழியர்களும் சேர்ந்து, உணவகங்கள் மற்றும் வணிகர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவார்கள்.

**பொருளாதார மீட்சிக்கான யுக்தி**

ப்ராம்ப்ட்டன் நகரின் பொருளாதாரத்தில் உள்ளூர் வணிகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கடந்த மாதம், ப்ராம்ப்ட்டன் நகர சபையானது, சிறு வணிகங்கள், உணவகங்கள் மற்றும் சுற்றுலா ஆகியவற்றை ஆதரிக்கும் நடவடிக்கைகளை உள்ளடக்கிய ப்ராம்ப்ட்டன் நகர பொருளாதார மீட்சிக்கான யுக்திக்கு ஒப்புதல் அளித்தது. இதன் ஒரு பகுதியாக, நகர நிர்வாகம் தனது "உள்ளூரை ஆதரிக்கவும்" பிரச்சாரத்தை துவக்கியது; இது கோவிட்-19 தொற்று பரவல் காலம் மட்டுமல்லாமது அதன் பின்னரும் கூட உள்ளூர் பொருட்களையே தேடி ஆராய்ந்து, தேர்ந்தெடுத்து, வாங்குவதற்கும் குடியிருப்புவாசிகளை ஊக்குவிக்கிறது.

**அறிஞர் கூற்றுக்கள்**

" உள்ளூர் வணிகங்கள் பாதுகாப்புடன் மீண்டும் திறக்கத் தேவையான மாற்றங்களைச் செய்து கொண்டிருக்கையிலேயே, பயன் மிக்க தீர்வுகளை நோக்கி அவர்களுடன் நெருக்கமாக பணியாற்ற நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எனது குடும்பமானது ஒவ்வொரு புதன்கிழமையும் எங்கள் உள்ளூர் உணவகங்களின் உணவை அனுபவித்து வந்தது; இப்போது திறந்தவெளியில் உணவருந்த எதிர்பார்த்து காத்திருக்கிறேன்; இப்படி திறந்தவெளியில் சாப்பிடுவது, அதையும் பாதுகாப்புடன் செய்வதை துவங்கியபின்னர் அதற்கான உள்ளூர் ஆதரவைத் தொடர்ந்து வழங்க நான் காத்திருக்கிறேன். "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கோவிட்-19 தொற்று பரவலின் விளைவாக நமது உள்ளூர் உணவகங்கள் எவ்வளவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என்பதை நாங்கள் அவர்கள் மூலமாகவே அறிந்திருக்கிறோம். வணிக நிறுவனங்கள் படிப்படியாக மீண்டும் திறப்பது தொடர்வதால், நமது உள்ளூர் வணிகங்கள் 'முழுமையானதும் பாதுகாப்பானதுமான' மீட்சியை அடைவதில் உதவக்கூடிய அனைத்து வழிகளையும் நாங்கள் தேடுவோம். "

- *குர்ப்ரீத் தில்லான், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 9 & 10; தலைமைப்பொறுப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் கலாச்சாரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரின் சிறு வணிகங்களின் நலன் எங்களுக்கு மிக மிக முக்கியமானதாகும். இப்போது அந்த வணிகங்களின் திறந்தவெளி இடங்களுக்கான இந்த மாற்றங்களுக்குத் திட்டமிட அனுமதிப்பது என்பது, மாகாண அரசாங்கத்திடமிருந்து நமக்கு பச்சைக்கொடி காட்டும்போது அந்த வணிக நிறுவனங்கள் மேற்கொண்டு செல்லலாம் என்பதை உறுதிப்படுத்த உதவும். "

- *பால் வின்செண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள்1 & 5;* துணைத் தலைமைப் பொறுப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் கலாச்சாரம், ப்ராம்ப்ட்டன் நகரம்

"எங்கள் ஊழியர்களும் மற்றும் நகரசபையும் நமது உள்ளூர் வணிகங்கள் மற்றும் பங்குதாரர்களின் தேவைகளுக்கு செவிசாய்த்துள்ளன; மேலும் அவற்றை மீண்டும் திறப்பதற்கு உதவக்கூடிய அனைத்து வழிகளிலும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஒரு நகர நிர்வாகமாக இருக்கும் எங்களுக்கு , நமது சமூகத்தின் கூட்டு மீட்பு மற்றும் பாதுகாப்புக்கு ஆதரவளிப்பதே எங்கள் பணியாகும்; திறந்தவெளி இடங்களிலும் வர்த்தகத்தின் விரிவாக்கம் என்பது, அதைச் செய்ய உதவும் என்பதை நான் அறிவேன். "

– *டேவிட் பேர்ரிக், தலமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரத்தில் திறந்தவெளி மற்றும் உள் முற்றம் ஆகியவற்றைத் திறக்க ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதற்கும் இந்த பகுதிகளை விரிவாக்கம் செய்ய அனுமதித்தமைக்கும் ஒன்ட்டேரியோ உணவக ஹோட்டல் மற்றும் மோட்டல் அசோசியேஷன், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தினருக்கு பாராட்டு தெரிவிக்கிறது. உணவகங்கள் சிரமப்பட்டுவிட்டன; இந்த நடவடிக்கையானது, உணவகங்கள் மேலும் படிப்படியாக முன்னேறி ருசிகரமான உணவுப்பண்டங்களைப் பெற நுகர்வோர் நாடிவரவும் அவர்களின் நம்பிக்கையைப் பெறவும் ஏதுவாக்குகிறது.

– *ட்டோனி எலெனிஸ், தலைவர், மற்றும் தலைமை செயல் அதிகாரி, ஒன்ட்டேரியோ உணவக ஹோட்டல் மற்றும் மோட்டல் அசோசியேஷன் (ORHMA)*

"ப்ராம்ப்ட்டன் டவுண்டவுன் நகரத்தில் நீண்டகாலமாக நிலைகொண்டுவிட்ட ஒரு வணிகமாக இருக்கும் எங்களுக்கு, இந்த கடினமான காலங்களில் நமது சமூகமும் நகரமும் எங்களுக்குக் காட்டிய ஆதரவுக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நகர நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்ட இந்த மாற்றங்களானது, எங்கள் வணிகத்தலம் மீண்டும் திறக்க அனுமதிக்கப்பட்டவுடன், மதிப்புமிக்க மற்றும் பலநாள் காணாதிருந்த எங்கள் வாடிக்கையாளர்களை பாதுகாப்பான வழியில் உபசரிக்க அனுமதிக்கும். அவ்வாறு பாதுகாப்பாக உபசரிப்பது கைகூடும்போது, எங்கள் முற்றத்தில் அனைவரையும் மீண்டும் பார்க்க நான் ஆவலுடன் காத்திருக்கிறேன். "

– *சபீனா கூல்ட்டர், உரிமையாளர், ஃபான்ஸொரெல்லி'ஸ் ரெஸ்டாரண்ட் & வைன் பார்*

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca